விடுப்பாரேயானால், அந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து, பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *62*, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

62—

பாலம் அமைத்தல்

***30823—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதி, அரவக்குறிச்சி ஒன்றியத்திலுள்ள தாலுகா ஆபீஸ் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தாலுகா ஆபீஸ் பாலம் அமைந்துள்ள இடம் எனது அரவக்குறிச்சி தொகுதியின் தலைமையிடமான அரவக்குறிச்சி ஆகும். இப்பேரூராட்சியினர் தினமும் இப்பாலத்தின் வழியாகவே தேசிய நெடுஞ்சாலைக்கோ, பள்ளிக்கூடங்களுக்கோ, அரசு மருத்துவமனைக்கோ செல்ல வேண்டும். இத்தாலுகா ஆபீஸ் பாலம் அருகிலேயே வட்டாட்சியர் அலுவலகம், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், காவல் நிலையம், அரசு மருத்துவமனை முதலிய பல முக்கிய இடங்கள் அமைந்திருப்பதால், தினமும் இப்பாலத்தை பல நூற்றுக்கணக்கானோர் உபயோகப்படுத்துகின்றனர். சிறியதாக மழை

பெய்தால்கூட இப்பாலத்தை பயன்படுத்த முடியாமல், பள்ளிக் கூடங்களுக்கும், என்.எச்.7 வழியாக மாவட்டத் தலைநகரத்திற்குச் செல்வதற்கும் சுமார் 7 கி.மீ. சுற்றிச் செல்ல வேண்டிய மிகச் சிரமமான நிலையில் உள்ளது. பொது மக்கள் 7 கி.மீ. சுற்றி, மாற்று வழியில் சென்றாலும், தடாகோயில் பாலம் என்பதன் மூலம்தான் செல்ல வேண்டும். வேறு வழியே கிடையாது. ஆனால் இப்பாலமும் மழைக்காலத்தில் முழுவதுமாக மூழ்கிவிடும். போன ஆட்சியில் பொறுப்பிலிருந்த ஆட்சியாளர்களின் பொறுப்பில்லாத தன்மையால் எனது தொகுதி மக்கள் மழைக் காலங்களில் மட்டுமல்ல, மற்ற காலங்களில்கூட குண்டும் குழியுமான, மிகப் பழுதாகிப்போன இப்பாலத்தினால் பாடாய்ப்படுகின்றனர். தமிழகத்திலுள்ள மூலைமுடுக்குப் பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் வசதி, மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி முதலிய அத்தியாவசியத் தேவைகளை, மற்ற நாட்டாரும் போற்றுகின்ற வகையில் நிறைவேற்றி வரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எனது தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கையான இப்பாலத்தை மிகவும் துரிதமான முறையில் அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டச் சாலை என்ற வகைப்பாட்டில் வருகின்ற அரவக்குறிச்சி—குலவம்பாடி சாலை கி.மீ. 0/2-ல் உள்ள தாம்போகிக்குப் பதிலாக பாலம் அமைக்கப்பட வேண்டியதாகும். இச்சாலையில் கி.மீ. 0/2-ல் நங்காஞ்சியாறு குறுக்கிடுகிறது. இவ்வாற்றின் நீர்வழிப்பாதை 60 மீட்டர் இடைவெளி உடையதாகும். தற்போது 32 கண்கள் கொண்ட 64.80 மீட்டர் நீளம் கொண்ட குழாய் தரைமட்ட தாம்போகியாக உள்ளது. இந்தத் தாம்போகிக்குப் பதிலாக ஒரு கண் 10 மீட்டர் அளவு, ஆறு கண்கள் உடைய உயர்மட்டப் பாலம் கட்ட ரூபாய் 130 இலட்சம் தேவைப்படும். மழைக் காலங்களில் மிகுந்த வெள்ளம் வரும்போது பாலத்திற்கு மேலே சுமார் ஒரு மணி நேரம் தண்ணீர் செல்லக்கூடிய வாய்ப்பு இருப்பதால், வரும் நிதி ஆண்டில் பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளும்போது இப்பாலப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2004 பிப்ரவரி 13]

முற்பகல் 10-05

திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

63—

சூரிய ஒளி மின் சக்தி

***21561—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின் சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளி மின் சக்தி மூலம் தெரு மின் விளக்குகள் எரிய வைக்க சிறப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் சூரிய ஒளி தெரு விளக்கு அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் 2002-2003 ஆம் ஆண்டில் சூரிய ஒளி மின் விளக்குத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு முதல் கட்டமாக 200 சூரிய ஒளி தெரு விளக்குகள் ஒதுக்கீடு செய்தது. பின்பு கூடுதலாக 200 சூரிய ஒளி தெரு விளக்குகள் ஒதுக்கீடு செய்து ஆக மொத்தம் 400 சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைப்பதற்கு விளக்கு ஒன்றிற்கு ரூ. 11,000 வீதம் மானியமாக வழங்க